பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 119 21—05—1993
இதழ்: 10 விலை ரூபா 3-50

University of Jaffna Sri Lanka
RECEIVED
Periodicals Division


## கொழும்பில் பல முனைகளில் தீர்வு முயற்சி

யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் அண்மையில் கொழும்பு சென்றிருந்த பொழுது, வத்திக்கான் தூதுவர் பேராயர் பிரான் சுவா பக்கே ஆண்டகை; மற்றும் அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிக பிரதிநிதிகள், அத்தியாவசிய சேவைகள் உத்தியோகத்தினர், நிதி பாதுகாப்பு இராசாங்க அமைச்சர் யோண் அமரத்துங்கா முதலியோரைச் சந்தித்து, தமிழ் மக்கள் படும் சொல்லணாத் துன்ப துயரங்கள், இன்னல் இடர்கள் பற்றி எடுத்துரைத்து, மனிதாபிமான முறையில் நீதியான சுமுகமான ஒரு தீர்வுக்கு வழிகோல தங்களாலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென அவர்களிடம் விண்ணப்பித்துள்ளார்.

✻ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ✻

# கிளிநொச்சி-முல்லைத்தீவு மாவட்டங்களில்

# யாழ். ஆயரின் மேய்ப்புப் பணி



**சென்ற ஆண்டு பிற்கூற்றில் மன்னார் மறை வட்டத்திலிருந்து யாழ். திருச்சபையைப் பொறுப்பேற்க வரும் வழியில் கொடுத்த வாக்குறுதிக்கேற்ப, இம் மாதத் தொடக்கத்தில் யாழ். ஆயர் பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை யாழ். மறை வட்டத்திற்குட்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு மேய்ப்புப் பணிக்கான 10 நாள் விஜயம் ஒன்றை மே 1 — 10 திகதிகளில் மேற்கொண்டார்.**

இப்பகுதிகளிலுள்ள 8 பங்குகளில், மாங்குளப் பங்கைத் தவிர்ந்த ஏனைய 7 பங்குகளையும் தரிசித்து, மிகவும் நெருக்கமான நிகழ்ச்சிநிரலின்படி, பரந்த பிரதேச பயண வசதியீனங்கள் மத்தியில் காலையிலும் மாலையிலுமாக 12 பொது நிலையங்கள், கோவில்களில், 1600 க்கு மேற்பட்ட கத்தோலிக்க விசுவாசிகளுக்கு உறுதிப்படுத்தல் அருள் சாதனம் வழங்கினார்.

பல வருடங்களுக்குப் பின் பல இளம் தலை முறையினர், விவாகமானவர், யாழ் குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் உட்பட போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவ்வாய்ப்புக் கிடைத்தது பெரும் வரப்பிரசாதமே.

எல்லாப் பங்குகளிலும், மக்கள் எல்லோரும் இத்திருச்சடங்குகளில் பங்குபெற பங்குக் குருக்கள் கன்னியர்களால் பல்வேறு பிரச்சனைகள் மத்தியில் சிறந்த முறையில் ஆயத்தம் செய்திருந்தமை போற்றத்தக்கது. ஆயரின் வருகையால் புத்துணர்வடைந்த இப்பகுதி மக்கள் புதுப்பொலிவோடு திருவழிபாடுகளில் பங்கெடுத்தமை கண்கொள்ளக் காட்சியாயிருந்தது- ''அஞ்சாதே, அஞ்சாதே, நான் என்றும் உன்னோடு'' என்று ஆண்டவனின் வார்த்தையைத் தனதாக்கிய யாழ் ஆயர் சென்ற இடமெல்லாம், ''ஆயர் உறுதிப்படுத்த வருகிறார்'' எனும் வாக்கியத்தால் அலங்கரிக்கப்பட்ட பதாகைகள், வளையங்கள், வீதிகள் தோறும் காணப்பட்டன.

(மேலதிக விபரங்கள்—பக்கம் 4)

## அரசிடம் கத்தோலிக்க ஆயர்களின் ஐந்து அம்சக் கோரிக்கை

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் ஈஸ்ரர் அமர்வு ஏப்ரில் மாதம் 22 – 24 திகதிகளில் கண்டி அம்பிட்டியா தேசிய குருமடத்தில் நடந்தேறியது. நாட்டில் திருச்சபையின் வளர்ச்சியோடு சம்பந்தப்பட்ட பல விடயங்கள் ஆராயப்பட்ட வேளையில், நாட்டின் வடபகுதி மக்கள் படும் இன்னல்கள் துன்பங்கள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டு, மேன்மை தங்கிய ஜனாதிபதிக்கு ஐந்து அம்சங்கள் அடங்கிய ஒரு மகஜர் அனுப்ப ஆயர்களால் ஏகமனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வான் மார்க்கமாக மேற்கொள்ளப்படும் குண்டு வீச்சுக்களும், மக்கள் குடி மனைகள் மேல் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களும் நிறுத்தப்பட வேண்டுமெனவும், மக்கள் மேல்விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை நீக்கி, வடக்குகிழக்குப் பகுதிகளுக்கு உணவு, மற்றும் மருந்து வகைகளைத் தொடர்ந்து அனுப்ப வேண்டுமெனவும், யாழ் குடாநாட்டுப்பயணிகளுக்குசங்குப்பிட்டிப்பாதையையும், மன்னார்த்தீவுக்கு விடத்தல்தீவுப் பாதையையும் உடனடியாகத் திறந்து விடுமாறும் ஆயர்கள் அம்மகஜர் மூலம் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.


## இளைப்பாறிய யாழ் ஆயருக்கு - திருமறைக்கலாமன்றம்
## ''நாட்டுக்கூத்தின் நற்பாதுகாவலன்'' பட்டம் வழங்கியது

யாழ் திருமறைக் கலாமன்றம் நெறிப்படுத்திய ''நாட்டுக்கூத்து விழா'' மன்ற அரங்கில் மூன்று தினங்களாக மே 8 – 10 திகதிகளில் நடந்தேறியது. இறுதி நாள் நிகழ்வின் போது, இளைப்பாறிய யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப் பிள்ளை ஆண்டகை நாட்டுக் கூத்துக் கலையின் வளர்ச்சிக்குக் காட்டிய ஆர்வம், ஆற்றிய வரலாறுபோற்றும் பெரும் தொண்டைப் பாராட்டி, ஆயர் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி, ''1993 நாட்டுக் கூத்தின் நற்பாதுகாவலன்'' எனும் பட்டம் சூட்டப் பெற்ற ''மாட்சிவியப்புமடல்'' அளித்தார் திருமறைக் கலாமன்ற இயக்குனர் அருள் கலாநிதி புலவர் நீ. மரிய சேவியர் அடிகளார். அதைத் தொடர்ந்து, நாட்டுக்கூத்துக் கலையை மேம்படுத்திய அண்ணாவிமார் கலைஞர்களுக்கு சான்றிதழ்கள் ஆயர் அவர்களால் வழங்கப்பட்டன.

இவ்வைபவத்தில் உரையாற்றிய ஆண்டகை அவர்கள், யேசு சபைக் குருக்கள் அக்காலத்தில் நம் பகுதிகளில் திருமறைப்பணியில் மேற்கொண்ட வழிமுறைகளில் நாட்டுக் கூத்தும் சிறப்பிடம் பெற்றதெனக் கூறி, 1647 இல் இயற்றப்பெற்ற சந்தியோகு அம்மானையிலிருந்து ஓர் பாடலை ஆயர் பாடியபோது, அவரின் ''மணிக்குரல்'' ஓசை எல்லோரையும் பிரமிக்கச் செய்தது!

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## அருள்திரு சிங்கராயர் O. M. I. அடிகளார் காலமானார்



அருள்திரு. ஆபரணம் சிங்கராயர் o.m.i. 11-05-1993 இல் இறைபதம் அடைந்தார். இவர் 1943ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் முதலாம் திகதி ஆபரணம், சலோமிப்பிள்ளை தம்பதியருடைய கனிட்ட மைந்தனாகப் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியில் முடித்து, அமலமரித் தியாகிகள் சபையில் சேர்ந்து தனது ஆரம்பப் பயிற்சியை நுகேகொட புனித வளனார் குருத்துவக் கல்லூரியிலும், தனது மெய்யியல் இறையியல் கல்வியை அம்பிட்டியா தேசிய குருமடத்திலும் முடித்து, 1973 ஆகஸ்ட் 20ஆம் திகதி அமல மரித்தியாகிகள் சபையில் ஒரு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

தனது தொடக்க குருத்துவப் பணியை, பாண்டியன் தாழ்வு உதவிப் பங்குத் தந்தை

( தொடர்ச்சி 4ஆம் பக்கம் )

## யாழ். மறைவட்ட மேய்ப்புப் பணிக்கான ஆயத்தக் கருத்தரங்கு

யாழ். மறைவட்டத்திலும் புதுப்பித்தலை ஊக்குவித்து பல்வேறு அப்போஸ்தலிக்க பணிகளிலும் மறு மலர்ச்சியை ஏற்படுத்துவது இன்றைய தேவையாக மாறியுள்ளது.

மறைவட்ட ரீதியான மேய்ப்புப்பணி மாநாட்டை ஒழுங்கு செய்ய யாழ் ஆயரால் ஒரு சிறிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதன் செயலாளராக அருள்திரு நிக்கலஸ் அடிகளார் பணியாற்றுகின்றார். இக்குழு எல்லோருடைய ஒத்துழைப்பையும் ஆலோசனைகளையும் நாடி நிற்கின்றது. ஒவ்வொருவரின் பங்களிப்பையும், பகிர்தலையும் வேண்டி நிற்கின்றது. ஆகவே பங்குகள்ஒன்றிணைந்த கருத்தரங்குகளை பல இடங்களில் நடாத்தவிருக்கிறது.

எனவே, இதன் முதற்கட்டமாக, இயக்குனர்களை ஊக்குவிக்க வெவ்வேறு நிலைகளிலுமிருந்து தெரிந்து கொள்ளப்பட்ட சிலருக்கு 22-05-93 இல் யாழ். மறைக்கல்வி நிலையத்தில் ஓர் ஆயத்தக் கருத்தரங்கு யாழ். ஆயரின் தலைமையில் குரு முதல்வர் அருள்திரு. S. J. இம்மானுவேல் அடிகளாரால் நெறிப்படுத்தப்படும்.

## மறைந்த ஜனாதிபதியின் ஆன்ம சாந்திக்காக கொழும்பு கத். பேராலயத்தில் திருப்பலி

கொழும்பு கத்தோலிக்க பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னான்டோ ஆண்டகை தலைமையில் மற்றும் மறை ஆயர், குருக்கள் இணைந்து கொழும்பு புனித லூசியா பேராலயத்தில் காலம் சென்ற ஜனாதிபதி, மேன்மை தங்கிய றணசிங்க பிரேமதாசா அவர்களின் ஆன்ம சாந்திக்காக 07-05-93 வெள்ளி அன்று கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

## தேவத்தையில் கருத்தரங்கு

1994 இல் நடை பெறவிருக்கும் மேய்ப்புப் பணிக்கான தேசிய மாநாடுக்குரிய ஆயத்த கருத்தரங்கொன்று, கடந்த ஏப்ரில் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை றாகம, தேவத்தையில் நடை பெற்றது. அருட்தந்தை D. வோர்ப்ஸ் அ.ம.தி. அடிகளார் நெறிப்படுத்திய தேசிய மட்டத்திலான இக் கருத்தரங்கில் யாழ் மறைவட்டத்திலிருந்து யாழ் ஆயர் அவர்களும் அருள்திரு றெஜிஸ் இராசநாயகம் அடிகளாரும் பங்குபற்றினர்.

## வத்திக்கானில் சர்வதேசக் கருத்தரங்கு

### சிலாப ஆயர் — விசேட பிரதிநிதி

கத்தோலிக்கத் திருச்சபையின் ''மறைக்கல்வியும் மேய்ப்புப் பணி மறைக்கல்வியும்'' என்ற தலைப்பிலாலான கத்தோலிக்க சர்வதேசக் கருத்தரங்கொன்று

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்கருத்து

# ஆழக் கடல் மீது ஒளி வீசும் மங்கை

மே மாதம் மரியன்னையின் மாதம்! ஆண்டவரின் விண்ணேற்ற விழாவைக் கொண்டாடும் காலம். நாம் ஒவ்வொருவரும் வான் வீட்டை நோக்கிப் பிரயாணம் செய்த வண்ணம் இருக்கிறோம்.

வாழ்க்கையெனும் ஆழ்கடலில் பிரயாணம் செய்யும்போது, திரண்டு எழும் அலைகள், பயங்கரப் புயல்கள், சூறாவளிகள், இயற்கையின் பலவித பருவக் கோளாறுகள் நம்மைத் தாக்குகின்றன.

இவ்வாழ்க்கைச் சமரில் சிலர் தோல்வியடைகின்றனர். இவற்றையெல்லாம் மேற்கொண்டு பயணத்தை வெற்றிகரமாக முடிக்கும் வீரர்களும் உளர்.

கொடுமையான, கடுமையான இக்கடல் வழிப் பயணத்தில் நம்மை பாதுகாப்பாக அழைத்துச் செல்ல பலம் வாய்ந்த கப்பல் ஒன்று இருந்தால் எவ்வளவு பயன் உள்ளதாக இருக்கும்! அக்கப்பலைச் சரியான திசையில் செலுத்த மறையாது பிரகாசிக்கும் துருவ நட்சத்திரம் ஒன்றும் உறுதுணையாக அமையுமானால் பயணம் மேலும் எவ்வளவு எளிதாக அமையும்!

எம்மை எப்பொழுதும் வழிநடத்தும் நம் வானகத் தந்தை நமக்கு சிறந்தவகையில் உதவி புரிந்து வருகிறார்.

"எண்ணிலடங்காத நீர்த்துளிகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் கடல் ( Mare ) என்று பெயரிட்ட இறைவன், தனது தனிப்பெருங்கருணையனைத்தும் ஒன்று சேர்ந்த, அக்கருணைக் கடலுக்கு மரியம்மாள் ( Maria ) என்று பெயரிட்டுள்ளார்" என்று புனித வின்சென்ட் டீ மொன்போர்ட் கூறுவது எவ்வளவு பொருத்தமானது!

"மரி" என்ற வார்த்தைக்கு 'கடலின் நட்சத்திரம்,' 'ஒளி வீசும் மங்கை' என்ற பொருள்களுண்டு.

ஆகவே, நம்மை வழிநடத்திச் செல்ல இறைவன் தந்த மரக்கலமும் துருவ நட்சத்திரமும் வேறுயாருமில்லை – நம் அன்னை மாமரியே!

பத்திமா மாதா காட்சியளித்த 50 ஆம் ஆண்டு நினைவு நாளாகிய 1967, மே திங்கள் 13ஆம் நாளில், பரிசுத்த தந்தை 6ஆம் சின்னப்பர் வெளியிட்ட "மாபெரும் சின்னம்" (A Great Sign) என்ற அறிக்கையில், "கிறிஸ்துவை அடைய ஒரே வழி தேவதாய்தான்," என்பதை வலியுறுத்திக் கூறினார். அவர் மேலும் கூறியுள்ளதாவது: "தேவ அன்னையின் வாழ்க்கை நெறியை சிறந்த எடுத்துக்காட்டாக ஏற்று தங்கள் வாழ்க்கையில் பிரதிபலிக்க முயலும் மரியாயின் மைந்தர்கள் புண்ணியங்களால் தங்களை அலங்கரித்துக் கொள்வார்கள்."

எனவே அன்னை மரியின் வாழ்க்கையின் தனிச் சிறப்பியல்புகளை அறிந்து, அடிக்கடி சிந்தித்து, அவற்றை அன்றாட வாழ்க்கையில் பின்பற்றி நடப்பது நம் கடமையாகிறது.

கன்னித்தாயின் வாழ்க்கைப் புத்தகம் எக்காலத்தும், எவ்விடத்தும், எல்லோருக்கும் பயன்படவல்ல இணையற்ற கலைப் பொக்கிஷம். அதில் அடங்கிய பாடங்களை நன்கு கற்றால் பகைகளை வென்று வளமாகவும், அவமானங்களை மேற்கொண்டு கௌரவமாகவும் வாழமுடியும். அன்னையின் உயிருள்ள நம்பிக்கை, தயக்கமற்ற கீழ்ப்படிதல், ஆழ்ந்த தாழ்ச்சி, தன்னலமற்ற விருப்புக்கள், தாராள அன்பு ஆகியவற்றைப் பின்பற்றுவோம்.

அனுதினமும், விசேடமாக மாதாவின் வணக்க மாதத்தில், அவளை நோக்கிச் செபிப்பது, அவள் புகழ் மாலையாகிய செபமாலையை ஓதுவது, பக்திச் செயல்களில் ஈடுபடுவது, அவளது மகிமையைப் பரப்பும் பக்திச்சபைகளில், சிறப்பாக மரியாயின் சேனையில், அங்கம் வகிப்பது ஆகிய அனைத்தும், அவளின் விசேட பாதுகாப்பைப் பிள்ளைகளாகிய நமக்குப் பெற்றுத் தரவல்லன என்பது திண்ணம்.

நம் விண்ணக அரசி நம்மைக் கரை சேர்ப்பாள்.

## திருமறை அறிவை வளர்ப்போம்

# கிறிஸ்துவின் வருகைக்குப் பின் மீட்பின் வரலாறு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

5. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, காலப்போக்கில், மனித இயல்பில் காணப்படும் போட்டிமனப்பான்மை, தேசியவாதம், பல்வேறு தப்பபிப்பிராயங்கள் போன்றவை கிறிஸ்தவ குடும்பத்தில் பிளவுகளையும் பிரிவுகளையும் ஏற்படுத்தின. கத்தோலிக்க ஐக்கியத்திலிருந்து பெரும் தொகுதியினர் பிரிந்து சென்றமைக்கு இரண்டு பக்கத்தினரிலும்குற்றமுண்டு. 5 ஆம், 10ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் கீழைத் திருச்சபைக்கும் உரோமைத் திருச்சபைக்குமிடையே இருந்துவந்த பிளவு திட்டவட்டமாகியது. இதே காலப்பகுதியில் கிழக்கிலும் மேற்கிலுமுள்ள கிறிஸ்தவ சமூகங்கள் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் ஐரோப்பாவிலும் மிக விரைவாகப் பரவிவந்த இஸ்லாம் மதத்தை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. கிறிஸ்தவர்கள் தமது சுதந்திரத்துக்காகப் போராடவேண்டியிருந்தது. அக்காலத்தில் மதத்துக்கும் அரசியலுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்தமையால், கொள்கை வேற்றுமை காரணமாக எழுந்த சச்சரவுகள் பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படுவதைத் தடைசெய்து விட்டன.

13ஆம் நூற்றாண்டில் மங்கோலியர்கள் ஆசியாவில் கிறிஸ்தவத்தை முற்றாக அழித்துவிட்டு ஐரோப்பாவின் மத்தியிற் பிரவேசித்தனர். கிறிஸ்தவ உலகு அவர்களையும் எதிர்த்து போராடவேண்டியிருந்தது.

ஆயினும் இக்காலப்பகுதியிற்றான் மேற்கிலே சமுதாயத்தை மாற்றியமைப்பதில் திருச்சபை தீவிரமாக ஈடுபட்டிருந்தது. கிறிஸ்தவ மதமானது பல மிகச் சிறப்பு வாய்ந்த சமூக, மறைஞான முன்னேற்றங்களையும், தலைசிறந்த கலைப்படைப்புக்களையும் உலகிற்களித்தது. புனித பிரான்சிஸ்கு அசிசியார் தமது சமகாலத்தவருக்கு நற்செய்தியின் மகிழ்ச்சியையும் ஏழ்மையையும் வாழ்ந்து காட்டினார். புனித தோமஸ் அக்குவைனஸ் இறைவெளிப்பாட்டின் உண்மையையும், மனிதனது பகுத்தறிவையும் சேர்த்து இணைத்தார்.

6. மத்திய காலத்தின் இறுதியிலும், நவீனகாலத்தின் ஆரம்பத்திலும் ஐரோப்பாவிலுள்ள திருச்சபை மறுமலர்ச்சி அவசியமென்பதை உணர்ந்து அறமுறையான ஒரு சுத்திகரிப்பும், ஆன்மீக புதுப்பித்தலும், மனிதப் பொதுநல இயலின் கோரிக்கைகளுக்கேற்ற ஒரு புதிய செயற்பாடும் அவசியமாயின.

ஜேர்மன் துறவியாகிய லூதர் ஒரு சீர்திருத்த இயக்கத்தை ஆரம்பித்தார். இதை ஜேர்மன் அரசர்கள் ஆதரித்தனர். ஈற்றில் இது ஒரு "கண்டன" இயக்கமாகி வட ஐரோப்பாவிலுள்ள கிறிஸ்தவ சமூகங்கள் உரோமன் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து பிரிந்துசெல்ல ஏதுவாயிற்று. உரோமைத் திருச்சபையினுள் பாப்புமாரும், ஆயர்களும் மறைத்துறை சார்பான ஒரு சீர்திருத்தத்தை பரிந்துரைத்தனர். இது திரிதெந்தின் பொதுச்சங்கத்தில் தெளிவாகக் கூறப்பட்டது. இச்சங்கத்தில் மனிதன், மீட்பு என்னும் உள்ளார்ந்த உண்மை, திருச்சபையின திரு ஆட்சியினது அமைப்பு முறைகள் என்பனபற்றிய அடிப்படைப் போதனைகள் இச்சங்கத்தில் தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்டன.

எத்தனையோ புனிதர்கள், புனித அவிலா திரேசம்மாள் போன்ற இறையுணர்வாளர்கள், புனித இஞ்ஞாசியார் போன்ற செயல் வீரர்கள், பிறரன்பு அல்லது சமூகநல இயக்கங்களை ஆரம்பித்தவர்

( தொடர்ச்சி 3ஆம் பக்கம் )

# அன்னை திரேசாவின் இதயக்குரல்

★ **இளைஞர்களே நீங்கள்......**

● **ஆறுதல் தர தயாராக இருக்கிறீர்களா?**

அன்பார்ந்த இளைஞர்களே! நீங்கள் எப்போதும் உயர்ந்த குறிக்கோளை முன் வைத்து வாழ வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஏழ்மையையும் எளிய உணவையும், துன்பத்தையும் என்னோடு பகிர்ந்து கொள்ள பல இளந் துறவிகள் எப்போதும் என்னைச் சுற்றிச் சூழ்ந்திருக்கிறார்கள். நம் நாட்டில் பெருமளவு பிணியாளர்கள் ஆங்காங்கே காணப்படுகிறார்களே! இந்நோயாளிகளையும் அன்புக்கு ஏங்கித் தவிக்கும் ஆன்மாக்களையும், ஆதரவற்றுத் தவிக்கும் அனாதைகளையும் சந்திக்க, அவர்களுக்கு ஆறுதல் அளிக்க நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?

# கத்தோலிக்க திருச்சபையின் மறைபோதகக் கைநூல்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## 1ஆம் பாகம்: விசுவாச அறிக்கை

**1வது பெரும் பிரிவு : நான் விசுவசிக்கிறேன், நாங்கள் விசுவசிக்கிறோம்.**

**1வது அத்தியாயம் : மனிதன் இறைவனை அறிய முடியும்.**

### சுருக்கம்

மனிதன் தன் இயல்பாலும் அழைத்தலாலும் ஒரு வழிபாட்டுச் சிருட்டி. ஏனெனில், அவன் கடவுளிடமிருந்து வந்து, அவரிடமே செல்கிறான். எனவே, கடவுளோடு தனக்குள்ள தொடர்பைச் சுயாதீனமாக ஏற்று வாழாவிடின், அவன் ஒரு பூரண மனித வாழ்வை வாழமுடியாது.

மனிதன் கடவுளோடு உறவுகொண்டு வாழவே படைக்கப்பட்டான். அவரிலேயே தனது இன்பத்தைக் காண்பான்.

மனிதன் சிருட்டிகள் தரும் செய்தியையும், தனது மனச்சான்றின் குரலையும் கேட்டால், எல்லாவற்றிற்கும் ஆதியும் அந்தமுமான கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற உண்மையை அடைய முடியும்.

நம்மைப் படைத்தவரும், ஆண்டுவருபவருமான உண்மையான ஒரே கடவுளை மனிதன் தனது இயல்பான புத்தியால், அவருடைய படைப்புக்கள் வழியாக, நிச்சயமாக அறிந்து கொள்ள முடியும் என்று திருச்சபை படிப்பிக்கிறது.

சிருட்டிகளின் பலவிதமான திறமைகளிலிருந்து அளவு கடந்த திறமைகளையுடைய கடவுளைப் பெயர் சொல்லி அழைக்கலாம். ஆனால், கடவுளைப்பற்றிய மறைபொருளை நமது பேச்சால் குறைத்துவிட முடியாது.

"சிருட்டிகர் இல்லையேல் சிருட்டிகளும் இல்லை" (இன்றைய உலகில் திருச்சபை 36). ஆகையால்தான் விசுவாசிகள் கிறிஸ்துவின் அன்பினால் உயிருள்ள கடவுளின் [illegible] அறியாதவர்களுக்கு அல்லது ஏற்காதவர்களுக்கு [illegible]படுகிறார்கள்.

(வளரும்)



# வழிபாட்டு வழிகாட்டி

திருவழிபாட்டில் திருப்பலி சிறந்த இடத்தை வகிக்கின்றது. எனவே திருப்பலியின் மகத்துவத்தை உணர்ந்து அதனை அர்த்தமுள்ளதாக்கி இறைமக்கள் அனைவரும் நிறைவாகச் செயலாற்றிப் பங்கெடுக்க நாம் உதவி புரிவது அவசியம். இந்நோக்கை மனதில் கொண்டு பின்வரும் அறிவுரைகளை குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் அனைவரும் செயல்படுத்த முயற்சிக்குமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

1. வார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு ஆகிய திருப்பலியின் இரு முக்கிய பகுதிகளுக்கு உரிய அமைப்பை நாம் புனிதமான முறையில் வெளிப்படுத்த வேண்டும். எனவே திருப்பலியின் முதற் பகுதியை தனியான வாசக மேடையில்நின்று நிறைவேற்றுவது சிறந்தது. ஆரம்ப வழிபாடு, வாசகம், மறையுரை, விசுவாசிகள் மன்றாட்டு போன்றவற்றை கூடியளவு பலிப்பீடத்திலிருந்து நடாத்துவதைத் தவிர்க்கவும்.

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**கதையும் கருத்தும்**

# அவனது இறுதி ஆசை

●R. அதிதி

கூர்ஜர மன்னன் மித்திர குப்தன் சோதிடப்பிரியன். சகுணம் சாத்திரங்களிலெல்லாம் அவன் நம்பிக்கைவைத்தான். கெளளி கத்தினால் போச்சு; அதற்கு விளக்கம் கேட்க சோதிடரைக் கூப்பிடுவான். பல்லி சொல்லும் பலனை அறிந்துகொள்ள பஞ்சாங்கத்தைப் புரட்டுவான். காக்கை கத்தினாலும் பூனை குறுக்கிட்டாலும் அவைபற்றியெல்லாம் அலட்டிக் கொள்வான்.

ஒரு நாள் காலையில் அரசன் படுக்கையை விட்டு எழுந்ததும் தனது பள்ளியறையின் யன்னல் வழியே, பார்த்தான். ஒரு நொண்டிப் பிச்சைக்காரனைப் பார்த்துவிட்டான். 'சே, அதிகாலையில் இவன் முகத்தில் விழிக்க வேண்டி வந்ததே!' என்று அலுத்துக் கொண்டே விருட்டென்று எழுந்திருந்த மன்னன் யன்னல் கதவில் முட்டிக் கொண்டான். தலை 'கிண்' என்று வலித்தது. ஒரு கையால் தடவிப் பார்த்தான். லேசாக இரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

உடனே தன் வேலைக்காரனைக் கூப்பிட்டு அந்தப் பிச்சைக்காரனை இழுத்துவரச் சொன்னான்.

'டேய், துக்கிரி' இன்று காலையில் எழுந்ததும் உன் முகத்தில் விழித்தேன். என் தலையில் நல்ல அடி: காயம். இப்படி உன் முகத்தில் விழிப்பவர்களுக்கெல்லாம் தினந்தோறும் எவ்வளவு துன்பம் வரும்! ஆகவே உனக்குத் தூக்குத் தண்டனை விதிக்கிறேன், என்று உத்தரவிட்டான்.

மன்னன் பேச்சுக்கு மறுபேச்சா? தூக்கு மேடைக்கு இழுத்துச் செல்லப்பட்ட பிச்சைக் காரனிடம் ''உன் இறுதி ஆசை என்ன?'' என்று கேட்டான் மன்னன்.

பிச்சைக்காரன் நிதானமாக, ''அரசே, அரண்மனைக் கோட்டைச் சுவரருகே படுத்துத் தூங்கிய நான் அதிகாலையில் கண்விழித்ததும் யன்னல் வழியே தெரிந்த தங்கள் முகத்தில்தான் விழித்தேன். தங்கள் முகத்தில் விழித்த எனக்குத் தூக்குத் தண்டனை கிடைத்திருக்கிறது. யன்னல் கதவில் இடித்த பழிக்குத் தூக்குத் தண்டனை என்றால், தூக்குத் தண்டனை அடைந்த பழிக்கு என்ன தண்டனை என்று தெரிந்து கொள்வதே என் இறுதி ஆசை'' என்றான்.

அரசன் சிறிது சிந்தித்தான். தனது அறியாமை விளங்கியது. அந்தப் பிச்சைக்காரனை விடுதலை செய்வதோடு, சாகும் நிலையிலும் தெளிவாக, உண்மையை அஞ்சாமல் கூறிய அவனைத் தனது அமைச்சனாக்கிக் கொண்டான்.

## சோதிடமா? தெய்வமா?

ஆறு அறிவு படைத்த மனிதன் குறைந்த அறிவு படைத்த பல்லி கத்துவதையும், பறவை குறுக்கே பறப்பதையும், பூனை மறிப்பதையும், நம்பி வாழ்க்கையின் வெற்றி தோல்விகளைக் கணிக்கலாமா?

பல்லி கத்தினால் அதன் பொருள் பல்லிக்கு வயிறு பசிக்கிறது என்பதுதான். பறவை குறுக்கே பறந்தால், அது எங்கேயோ உணவைத் தேடிப் போகிறது என்பதுதான் பொருள். பூனை ஓடினால் நாய் துரத்துகிறது என்றும் பொருள் கொள்ளலாம்.

''நரி இடமிருந்து வலம் போனால் நல்லதா, வலமிருந்து இடம் போனால் நல்லதா?'' என்று ஒருவன் கேட்டான். அதற்கு மற்றவன், ''நரி மேலே விழுந்து கடித்துக் குதறாமல் போனால் நல்லது'' என்றான்.

''உள்ளங்கை ஊறினால் விருந்தாளிகள் வருவார்களா?'' என்ற கேள்விக்கு, ஓர் அறிஞன், ''விருந்தாளி வருவது நிச்சயமல்ல, ஆனால் சிரங்குவருவது நிச்சயம்'' என்று பதில் தந்தார்.

அளவிற்கு மீறி சோதிடத்தை நம்புபவர்கள் அந்த அளவிற்குத் தெய்வத்தை நம்பாதவர்களே!

## வழிபாட்டு...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

2. காணிக்கைப் பவனியின் போது அப்பமும் இரசமும் வசீகரம் செய்யும் பொருட்டு பீடத்தின் மேல் வைக்கப்பட்டிருக்கும். ஏனைய காணிக்கைப் பொருள்களை பீடத்திற்கு அண்மையில் ஒழுங்கு செய்யப்பட்ட இடமொன்றில் வைக்கலாம்.

3. காணிக்கைப் பகுதி முடிவில் குரு கை கழுவியபின் ''சகோதரரே ...செபியுங்கள்'' என்றழைக்கும் போது இறை மக்கள் அனைவரும் எழுந்து நிற்பது நன்று. நற்கருணை மன்றாட்டு ஆரம்பிக்கும்போது முழந்தாளிடவும். நற்கருணை பெற்ற பின் நன்றி மன்றாட்டுக்கு எழுந்து நிற்கவும். ஆலயத்தில் எல்லோரும் ஒன்றிணைந்து செயல்படுவது விசுவாச வெளிப்பாடாகும்.

4. திருவழிபாட்டில் பாடப்படும் ஒவ்வொரு பாடலும் மறைவட்டத்தில் பாடப்படுமாயின் ஆயரின் அங்கீகாரத்தையும் பெற்றிருக்க வேண்டும்- (தேசிய வழிபாட்டு ஆணைக் குழு) எமது மறைவட்டத்தில் தேவைக்கென அச்சிடப்பட்ட ''இசை பாடும் இதயம்'' என்னும் பாடல் புத்தகத்தையே எல்லாப் பங்குகளிலும் நிறுவனங்களிலும் பயன்படுத்துமாறு வலியுறுத்தி நிற்கின்றோம். வேறு பாடல் புத்தகங்களிலிருந்தும் ஒலிப்பதிவு நாடாக்களிலிருந்தும் புதிய பாடல்களைத் தகுந்த அனுமதியின்றி அறிமுகம் செய்ய வேண்டாம். துண்டுப்பிரசுரமாக விழாக்காலங்களிலே புதிய பாடல்களை அச்சிட்டு வெளியிடுவதைத் தவிர்க்கவும். அவ்வாறு அச்சிட வேண்டிய அவசியம் இருப்பின் முன்கூட்டியே தகுந்த அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.

5. திருப்பலியில் இறுதி ஆசீர்வாதத்தின் பின்னரே ஏனைய செபங்கள் சொல்லப்படலாம். (உ/ம். நம் நாட்டிற்காகச் செபம்) விசேட பக்தி முயற்சிகள் (சதா சகாயமாதா, அந்தோனியார்.........) ஒரு போதும் திருப்பலியின் முதற் பகுதியுடன் இணைக்கப்படக் கூடாது. இப்பக்தி முயற்சிகள் திருப்பலியின் முன் அல்லது பின் இடம் பெறலாம்.

(தே. தி. வ. ஆணைக்குழு)

அருள்திரு. ஜேக்கப் நிக்கலஸ்
யாழ். திருவழிபாட்டுநிலையம்.

## திருமறை அறிவை வளர்....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஆகியவர்கள் திரிதெந்தின் பொதுச்சங்கம் போதனையில் எடுத்துக்காட்டியவற்றைத் தம் வாழ்க்கையில் சாதனை ஆக்கினர்.

அதே வேளையில் உரோமைத் திருச்சபையின் மறை போதக ஆர்வம் தட்டியெழுப்பப்பட்டது. நற்செய்தியானது ஐரோப்பியர்கள் புதிதாகக் கண்டுபிடித்த ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்காக் கண்டங்களிலுள்ள எல்லாப் பிரதேசங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டது. இப்பணியில் புனித பிரான்சிஸ்கு சவேரியார் சிறந்து விளங்கினார்.

7. இன்று, மனுக்குலமானது சுதந்திரத்துக்காகவும் உண்மையான மனித முன்னேற்றத்துக்காகவும் ஏங்குகின்ற இவ்வுலகில், உள்ளார்ந்த கவலைகள், துன்பங்கள் இருந்த போதிலும், கத்தோலிக்க திருச்சபை நற்செய்தியை அதன் நிறைவான விடுதலையளிக்கும் ஆற்றலுடன் அளிக்க முயல்கின்றது. திருச்சபையின் குறைபாடுகள் பலவீனங்கள் காரணமாக அது வரலாற்றில் அளித்த சாட்சியத்தினால் விளைந்த தீமை குறைந்துபோயிற்று. இதை உணர்ந்த திருச்சபை ஓர் உள்ளார்ந்த புதுப்பித்தலை மேற்கொண்டு, தான் கிறிஸ்துவின் மனப்பான்மையோடு ஒட்டியிருக்கவும் அதே சமயத்தில் தற்கால மனிதனின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கவும் கூடியதாக தனது வாழ்வை நவீனப்படுத்த முனைந்துள்ளது. இவ்வளவு காலமும் பிரிந்திருந்த கிழக்கு மேற்கு கிறிஸ்தவரிடையே ஒரு முழுமையான ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற ஆவல் கூடிய முனைப்படைந்துள்ளது. அதே வேளையில் இலட்சக்கணக்கான கிறிஸ்தவரல்லாத மக்களைத் திருச்சபை உள்ளார்ந்த நல்லெண்ணத்துடனும் பயனுள்ளவிதத்திலும் நோக்குகின்றது. ஏனெனில், அவர்களுக்கும் அது ஒரு விசேட வாழ்க்கைச் செய்தியைக் கொண்டுள்ளது.

இரண்டாம் வத்திக்கான் சங்கம், சகல மக்கள் மத்தியிலும் கிறிஸ்துவினால் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை நிறைவேற்றுவதற்குத் திருச்சபை எடுக்கும் பெருமுயற்சியை எடுத்துக்காட்டுகின்றது. இதிலே மனித வாய்ப்புவளங்களைவிட கிறிஸ்துவின் பிரசன்னத்தையே திருச்சபை நம்பியுள்ளது. ஏனெனில், தமது சீடர்களை விட்டுப் பிரியுமுன், ''நான் உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்'' (மத். 28:20) என்று கிறிஸ்து அவர்களுக்குக் கூறினார். வேதாகமத்தில் முன் அறிவித்ததுபோலவே அனைத்துலக திருச்சபையில் நன்மனதுடைய மக்கள் எல்லோரும் தந்தையாகிய இறைவனின் ஐக்கியத்தில் ஒன்றுசேரும் படிக்கு ''ஆண்டவருடைய வார்த்தை உலகெங்கும் பரவி மகிமை பெறும்படியாக'' (2 தெச. 3:1) இந்த விசுவாசத்திலிருந்தே கிறிஸ்தவரின் செபமும், முழுமையான அர்ப்பணமும் ஊற்றெடுக்கின்றன. ''இதோ கடவுளின் இல்லம் மனிதரிடையே உள்ளது. அவர் களோடு அவர் குடிகொள்வார். அவர்கள் அவருக்கு மக்களாயிருப்பர்'' (திருவெ. 21,3).

(வளரும்)

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 7 | எம் விழிகளின் ஒளி யேசு |
| சுடர்: 10 | எம் வாழ்வின் வழி யேசு |

## அம்மா

**4. ஏ. கே. 53 பெற்றவர் யார்?**

13 ஆம் நூற்றாண்டில் அல்பி ஜென்ஸ் பதித மதம் ஐரோப்பா எங்கும் கொள்ளை நோய்போல் பரவியது அவ்வேளையில் விசுவாசமிக்க கிறிஸ்தவ மக்கள் வதைக்கப்பட்டனர், கொலை செய்யப்பட்டனர்; கோயில்கள் சூறையாடப்பட்டன.

ஸ்பெயின் நாட்டில் உயர்குடும்பத்தில் பிறந்த செல்வமிக்கவராக இருந்த டொமினிக் சாமிநாதர் கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் துறந்து குருவானார். தன் செபத்தாலும் தபத்தாலும் தமது சபையிலுள்ள குருக்களுடன் சேர்ந்து பதித மதத்துக்கு எதிராகச் செயல்பட்டார். இறை அன்னையில் பக்திமிக்க சாமிநாதருக்கு அம்மா காட்சி கொடுத்து கிறிஸ்துவத்தைக் காக்கும் கேடயமாக ஏ. கே. 53ஐக் கையளித்தார்.

ஏ. கே. 53 (செபமாலை) உடன் சாமிநாதர் செயல்படத் தொடங்கினார். அதன் ஒலி ஐரோப்பா எங்கும் ஒலித்தது. அம்மாவின் மைந்தர் கரங்களில் ஏ. கே. 53 இன் வல்லமை பதித மதத்தை வெற்றி கொண்டது.

இன்றைய நாளில் செபமாலை என்றால் செபிக்கப் பின்னடிக்கும் கண்மணிகாள் உங்கள் உள்ளத்தை உன்னத அம்மா பக்கம் திருப்புங்கள். உங்கள் கரம் ஏ. கே. 53 உருட்ட, உதடு உச்சாடம் செய்ய, உள்ளமானது மரி (அம்மா) வழி இறைமகனை நாடும் உன்னத மக்களாக மாறுங்கள். இங்கும் அம்மா உங்களுக்கு வெற்றியைப் பெற்றுத்தருவா.


இது உறுதி.

உங்கள் அன்பின்
அன்பு விழி

| அங்கத்துவம் | | ஆண்டு | |
|---|---|---|---|
| A/53 | அ. ரெரன்ஸ் செல்ற்றன் | 12B | யா/சம்பத்திரியார் கல். |
| 305 | அ. ரசில்டா தர்மினி | 10 | யா/திருக்குடும்ப கன். ம. |
| 306 | அ. மெரிற்றா வேஜினி | 9 | ,, ,, ,, |
| 307 | இ. கிறிஸ்ரீன் தயாளினி | 10 | ,, ,, ,, |

மகிமையின்

## 1ஆம் ஆண்டு நிறைவு



பண்டிதர்
பா. செ. ஞானப்பிரகாசம்

| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 1911–08–30 | 1992–05–23 |

தந்தையே நீ எல்லாமே தந்தாய்! தனையர் நாம் தளிர்க்க அன்பினைத் தந்தாய்! மலர்போன்ற மதிவதனம் மலை போன்ற பெருமிதயம், ஈந்த ஈசனருள் பேரானந்தம் பெற்று வாழ்வீர்!

இரங்கற் திருப்பலி மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் 1992–05–22 காலை 6.30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப் படும்.

அன்புடன் நினைவு கூரும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரர், பூட்டப்பிள்ளை,
மைத்துனர் குடும்பம்.

கண்டி வீதி,
மிருசுவில். A/13/3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி-முல்லைத்தீவு மாவட்டங்களில்

# இன்னல்கள் மத்தியில் இன்முகம் காட்டிய யாழ். ஆயர்

கொழும்பிலிருந்து மேதின மன்று புறப்பட்ட யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, அன்று மாலை கிளிநொச்சியை வந்தடைந்த பொழுது பங்குத்தந்தை B. F. பொனிபஸ் அடிகளாருடன் குருக்கள் பலர் ஆண்டகையை வரவேற்றனர். மே 2ஆம் நாள் ஞாயிறு அன்று புனித திரேசம்மாள் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி, கன்னியர் மடம் மற்றும் மறைசார்ந்த இல்லங்களைத் தரிசித்தார்.

மே 3ஆம் நாள் திங்கள் காலை, ஜெயந்திபுரம் புனித அந்தோனியார் ஆலயத்தில், பங்குத்தந்தை E. செபஸ்ரியன் ஆயத்தம் செய்த 127 பேருக்கும்,மாலையில் பரந்தன் புனித அந்தோனியார் கோவிலில் தர்மபுரம், முரசுமோட்டை, மற்றும் இடங்களிலிருந்து பங்குத்தந்தை A. F. பெனற் செய்த ஒழுங்கின் பிரகாரம் 130 பேருக்கும் ஆயர் அவர்கள் உறுதிப்படுத்தல் அருள்சாதனம் வழங்கினார்.

மே 4ஆம் நாள் செவ்வாய் அன்று, முல்லைத்தீவு, முள்ளியவளை புனித திரேசம்மாள் ஆலய வெளியரங்கில், அளம்பில், முல்லைத்தீவுப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் உட்பட 160 பேர் பங்குத்தந்தை R.ஸ்ரலின் உதவியுடன் உறுதிப்படுத்தப்பட்டனர்.

மே 5ஆம் நாள் புதன் அன்று, அருட்தந்தை A. J. யாவிஸ் மேற்கொண்ட ஒழுங்கின் படி காலையில் புதுக்குடியிருப்பிலும், மாலையில் இரணைப்பாலையிலும் 582 பேர் ஆண்டகை அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டனர்.

மே 6ஆம் நாள் வியாழன், அருள்தந்தை யேம்ஸ் பத்திநாதருடைய பங்காகிய முளங்காவிலில் இரணைதீவிலிருந்து குடிபெயர்ந்த மக்களின் முயற்சியால் புதிதாக அமைக்கப்பட்ட 100×40 அடி இரணை மாதா கோவிலில் 85 பேருக்கு உறுதிப்படுத்தல் அருள்சாதனம் வழங்கியபின், நாச்சிக்குடா, குமுளமுனையில் வாழும் மாதகல், நாவாந்துறை, மண்டைதீவிலிருந்து இடம் பெயர்ந்த மக்களையும் ஆயர் தரிசித்து ஆறுதலளித்தார். மாலையில் முளங்காவிலில் 127 பேர் உறுதிப்படுத்தப்பட்டனர்.

மே 7ஆம் நாள் வெள்ளியன்று, காலையில், யாழ் மனித முன்னேற்ற நடுநிலையத்தினால் பராமரிக்கப்படும் புதிய குடியமைப்பாகிய ஜெயந்திபுரத்தில் ஓர் கொட்டில் கோவிலில் 50 பேருக்கும், மாலையில் வெகு ஆடம்பரமாக ஒரு மைல் வீதியால் பவனியாக வலைப்பாட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்ட ஆயர் அங்கு 160 பேருக்கும் உறுதிப்படுத்தல் அருள்சாதனம் வழங்கினார். பங்குத்தந்தை M. கருணாரட்ணம் சகல ஏற்பாடுகளையும் செவ்வனே செய்திருந்தார்.

மே 8ஆம் நாள் சனிக்கிழமை காலை வலைப்பாடு சகாய மாதா கோவிலுக்கு அண்மையிலுள்ள வேரவில் என்னுமிடத்தில், இடப்பெயர்ந்த கன்னியர்களுக்கென தற்காலிகமான ஓர் இல்லத்தை ஆயர் அவர்கள் திறந்துவைத்தார். மாலையில் பங்குத்தந்தை M. B. ஞானரத்தினம் மேற்கொண்ட ஒழுங்குகளின்படி வட்டக்கச்சி புனித சூசையப்பர் ஆலயத்தில் 60 பேர் ஆயரால் உறுதிப்படுத்தப்பட்டனர்.

மே 9ஆம் நாள் ஞாயிறு அன்று காலையில் கிளிநொச்சி புனித திரேசம்மாள் ஆலயத்தில் 127 பேருக்கு உறுதிப்படுத்தல் அருள்சாதனம் வழங்கிய பின், நம் ஆயர் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு வவுனியாவில் அவ்இரவைக் கழித்தபின், மறுநாள் காலை திருகோணமலை சென்று, அங்கிருந்து கப்பல் மார்க்கமாக 11ஆம் திகதி செவ்வாய் காலை பருத்தித்துறையை வந்தடைந்தார்.

## நாட்டுகூத்தின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் ஆண்டகை அவர்கள், அச்சுவேலியைச் சேர்ந்த தம்பி முத்துப்பிள்ளை புலவர் நடாத்திய அச்சகத்தின் மூலம் ஆற்றிய அரும் பணிகளைப் போற்றி, 1890 இல் முதலில் அச்சிடப்பட்ட "எஸ்தாக்கியார் நாடகம்" 1928 இல் 6 வது பதிப்பாக வெளிவந்தது அதன் பெருமையைக் காட்டுவதென்று கூறி, அதன் 7 வது பதிப்பு வெகு விரைவில் திருமறைக் கலாமன்றத்தினால் வெளியிடப்படுமென்றும் தெரிவித்தார்.

அன்றைய நாள் நிகழ்ச்சிகள் திரு. காரை சுந்தரம்பிள்ளையின் தலைமையில் மங்களவிளக்கேற்றி ஆரம்பமாயின. திருமறைக் கலாமன்ற நாட்டுக் கூத்துப் பொறுப்பாளர் திரு பாலதாஸ் இறைவணக்கம் பாட அதன் பொதுச் செயலர் கொன்ஸ்ரன்ரைன் வரவேற்புரை நிகழ்த்தினார். தலைமை உரையில் "ஈழத்து தேசிய கலையாகிய நாட்டுக் கூத்தை ஒதுக்கியிருந்த காலம் மாறி, உயிர்த்துடிப்புடன் மறுமலர்ச்சி பெற்று வரும் இக்கலையை வளர்ப்பவர்களுக்கு உதவி செய்யாவிடினும் உபத்திரமாவது கொடுக்காதிருக்க வேண்டும்" என சுந்தரம் பிள்ளை அவர்கள் கேட்டுக்கொண்டார். சிறப்புரை ஆற்றிய புனித பத்திரிசியார் கல்லூரி உபஅதிபர் அருள்திரு V. பிலேந்திரன் அடிகளார் "கூத்துக்களின் எதிர் காலப்பணி" எனும் தலைப்பில் அதன் வளர்ச்சியின் பின்னணியில் அரிய கருத்துக்களை வழங்கினார்.

"பூதகுமாரி" எனும் நாட்டுக் கூத்து திருமறைக் கலாமன்றத்தினரால் மேடையேற்றப் பெற்றது.

"கண்ணகி வழக்குரை," 'பவளக் கொடி, 'சென் நீக்கிலஸ்' எனும் மூன்று நாட்டுக் கூத்துக்களுடன் விழா இனிதே நிறை வெய்தியது.

## வத்திக்கானில்...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

வத்திக்கானில் தொடக்கப்பட்டுள்ளது. தேசிய மற்றும் தல அளவில் கத்தோலிக்க மறைக் கல்வி ஏட்டைப் பயன்படுத்தும் முறைபற்றி மூன்று நாள் கருத்தரங்கில் விவாதிக்கப்படும். குருக்கள் திருப்பீடத்தால் நடத்தப்படும் இக் கருத்தரங்கில் தேசிய ஆயர்களின் மறைக்கல்வி ஆணைக்குழுவின் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர். ஆசியப்பிரதிநிதியாக பிலிப்பைன்சின் லியனாடோ பெகாசி, இன்னும் இலங்கை சிலாப ஆயர் பிராங் மார்க்கஸ் பெனாண்டோ, பங்களாதேசில் டாக்கா பேராயர் மைக்கல் ஹொகாரியோ உட்பட ஓசியேனாவிலிருந்து 9பேர்,ஆபிரிக்காவிலிருந்து19பேர்,அமெரிக்காவிலிருந்து 16 பேர், ஐரோப்பாவிலிருந்து 20 பேர், என இக்கருத்தரங்கில் பங்களித்து வருகின்றனர்.

## அருள்திரு சிங்கரா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாக ஆரம்பித்த இவர், கொய்யாத்தோட்டத்தில் கிறிஸ்து அரசர் ஆலயத்தை மிகவும் அழகான முறையில் கட்டி முடித்தார். 1976 இல் இருந்து 1982 மட்டும் ஒரு போதகராக பல இடங்களிலும் போதித்து சிறந்த பணியாற்றி வந்தார்.

1982 கார்த்திகை 14ஆம் திகதி, இலங்கை ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு இவர் 5 வருடங்கள் நீண்ட சிறைவாசத்தை அனுபவித்தார், பின்பு 1987இல் நிரபராதியாக விடுதலை செய்யப்பட்டு மீண்டும் தமது போதகப் பணியைத் தொடர்ந்தார்.

கடந்த சில வருடங்களாக தமிழீழ மண்ணில் பல அபிவிருத்தித் திட்டங்களிலும், மக்கள் முழு விடுதலைப் பணியிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அடிகளார் தமது 50ஆவது வயதில் மாரடைப்பால் மரணமானார். அன்னாருடைய ஆன்ம சாந்திக்காக ஜெபத்திலும், திருப்பலியிலும் வேண்டிக் கொள்வோமாக!

# கொலைகள் குறித்த ஏடுகளை வெளியிட வேண்டும்

எல்சல்வடோர் நாட்டில் 12 வருடகால உள்நாட்டுப் போரில் நடந்த கொலைகளை குறித்த ஏடுகளை அமெரிக்க ஐக்கிய நாடுகள் வெளியிட வேண்டுமென சர்வதேச நாட்டு யேசுசபையினர் அழைப்பு விடுத்தனர். கடந்த காலங்களில் எல்சவடோர் நாட்டில் என்ன நடந்ததுஎன்ற உண்மைகளை அடைய அமெரிக்க ஐக்கிய நாட்டிடம் உள்ள ஏடுகள் தகவல்களை வழங்க முடியும் என்றார் மத்திய அமெரிக்கபல்கலைக்கழகத்தின் தலைவர் இயேசு சபைக்குரு மிக்கேல் எஸ்திராவாடா. பேராயர் றொமேரோ, 6 யேசு சபையினர்,அவர்களின் இல்லப் பணியாள் போன்றவர்களின் கொலைகள் குறித்த உண்மைகளையும் பெறமுடியும் என்றார்.

எல்சல்வடோர் நாட்டின் கடந்த கால மனித உரிமைகள் மீறல்களுக்கு அமெரிக்க ஐக்கிய நாடு எவ்வகையில் பதிலளித்துள்ளது. அதன் அணுகு முறைகள் எவ்வகையில் மாற்றியமைக்க முடியும் என்பதற்கு உதவவும் இத்தகவல்கள் வெளியிடப்படவேண்டும் என்று வலியுறுத்தினார் யேசு சபைக்குரு.

## மக்களின் அவலநிலை தீர்க்க முயற்சி

றொபேசியாவில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அவல நிலை குறித்து தன் வருத்தத்தைத் தெரிவித்துள்ளார் அந்நாட்டுக் கருதினால் ன்பானியஸ் புகாரி.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்புத் தலைவருக்கு கருதினால் அனுப்பிய செய்தியில் பாதிக்கப்பட்டுள்ள இடங்களிலுள்ள மக்களைச் சென்று பார்வையிடுவதற்கு ஆயர்களும் மேய்ப்புப் பணியாளர்களும் 1991ஆம் ஆண்டு இலையுதிர் காலமுதல் விண்ணப்பித்து வருகின்றபோதிலும் இதுவரை அனுமதிக்கப்படவில்லை என்ற தன் வருத்தத்தை தெரிவித்துள்ளார்.

றொபேசியாவில் 2 லட்சம் அகதிகள் தங்கள் பங்குகளை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர், மீண்டும் தங்கள் பங்குகளுக்குத் திரும்பி வருவதற்கான வசதிகள் கிட்டவில்லை என்றும் கருதினாலின் செய்தி கூறுகின்றது. மக்களின் நலனைக்கருதி அமைதியைக் கொண்டு வருவதில் திட்டவட்டமான செயற்பாடுகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் முன்னாள் யூகோசெலாவியாவைச் சேர்ந்த றொவோஷியக் கருதினால் விண்ணப்பித்துள்ளார்.

## உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்

செர்பியக் குடியரசிலுள்ள பகுதியில் விசுவாசிகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென அப்பகுதி ஆயர்கள் விண்ணப்பம் ஒன்றை விடுத்தார். பல நூற்றாண்டுகளாக ஓரே குடும்பமாக கத்தோலிக்கர்கள் மத நம்பிக்கையாளருடன் வாழ்ந்து வந்த பகுதியில் தற்போது அவர்கள் பாகுபாடுடன் நடத்தப்படுவதாகவும் ஏறத்தாள 20ஆயிரம் பேர் வீடுகளை விட்டு வெளியேறக் கட்டாயப்படுத்தப்படுவதாகவும் ஆயர் தன் அறிக்கையில் கூறியுள்ளார். கத்தோலிக்கக் குருக்கள் துறவிகள் குறித்து பலவிதமான பொய்த் தகவல்கள் பரப்பப்படுவதுடன் அவர்கள் அச்சுறுத்தப்பட்டு கோவில்களும் இடிக்கப்படுகின்றன என்று கூறும் ஆயரின் அறிக்கை குற்றம் செய்வோர் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவதில்லை எனவும் குறை கூறுகின்றது. செர்பியப் பகுதியில் சிறுபான்மையினராக வாழும் குரோவேஷிய கத்தோலிக்கரின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்கு அனைவரும் தங்கள் குரலை எழுப்ப வேண்டுமெனவும் அவ்வறிக்கையில் விண்ணப்பித்துள்ளார் ஆயர்.

## குருத்துவ நிறைவு தினம்

### "செபிப்போமாக"

| | | |
|---|---|---|
| யூன் 12 | S. N. அருள்நேசன் o.m.i. | 1941 |
| | G. ராஜேந்திரம் S. J. | 1963 |
| 13 | S. J. பிரான்சிஸ் o.m.i. | 1959 |
| 15 | மேரி யோசப் செலஸ்ரின் C. R. | 1971 |
| 19 | கிறிஸ்டி செல்வராசா I.V.D. | 1986 |
| | T. யேசுதாசன் சந்திரன் | 1986 |
| | ரூபன் மரியாம்பிள்ளை | 1986 |
| | R. ஸ்ரலின் | 1986 |
| | ஜெராட் S. சவிரிமுத்து | 1986 |
| | F. L. நிக்கலஸ் குரூஸ் o.m.i. | 1986 |
| | செபஸ்ரி நிக்கலஸ் o.m.i. | 1986 |
| | J. B. அன்ரனி | 1989 |
| | A. F. பெனற் | 1989 |
| | S. யூஜின் பிரான்சிஸ் | 1989 |
| | C. J. அன்ரனி பாலா | 1989 |
| | T. A. தவராஜசிங்கம் | 1989 |
| | M. டேவிற் | 1989 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேமஸ் அவர்களால் உரிமைபாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1993 ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி